தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மன்மத, புரட்டாசி 8, திருவள்ளுவர் ஆண்டு–2046

2015 செப்டம்பர் 25, வெள்ளிக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"குடிதழீஇக் கோல்ஓச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு."

குடிமக்களை அன்புடன் நன்கு பாதுகாத்து, நீதிநெறி தவறாது, நல்லாட்சி செய்யும் அரசருடைய அடிகளைப் பொருந்தி உலகம் நடக்கும்.

1. இரங்கல் தீர்மானம்

சவுதி அரேபியா, மினா நகரில் ஹஜ் யாத்ரீகர்கள் கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இரங்கல் தீர்மானம். "24–9–2015 வியாழக்கிழமை அன்று, சவுதி அரேபியாவின் மினா நகரில், உலக நாடுகளிலிருந்து புனித ஹஜ் பயணம் மேற்கொண்ட ஹஜ் யாத்ரீகர்களில், தமிழ்நாட்டைச் சேர்ந்த 3 ஹஜ் யாத்ரீகர்கள் உள்பட, 700–க்கும் மேற்பட்டோர் கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்ததோடு, 800–க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர் என்ற துயரச் செய்தி அறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது. இந்தத் துயரச் சம்பவத்தால் தங்களது இன்னுயிரை இழந்திட்ட ஹஜ் யாத்ரீகர்கள் குடும்பத்தினர்களுக்கு இப்பேரவை ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது. இக்கூட்ட நெரிசலில் சிக்கி படுகாயமுற்று மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு ஆறுதலையும், அவர்கள் விரைவில் குணமடைய வேண்டுமென்ற விழைவையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது."*

இந்த இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றும்முகத்தானும், இத்துயர சம்பவத்தில் தங்களது இன்னுயிரை இழந்தவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையிலும், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித் துளிகள் அமைதி காக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித் துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.)

2. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 341, மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

341—

ஆரம்ப சுகாதார நிலையம்

***43537—திரு. ந. நஞ்சப்பன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம், பனைக்குளம் ஊராட்சி, திருமல்வாடியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிவோடு வணங்குகிறேன்.*

தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம், பனைக்குளம் ஊராட்சி, திருமல்வாடி பகுதி மக்கள்தொகை எண்ணிக்கை மற்றும் இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி போன்ற விதிமுறைகளைப் பூர்த்தி செய்யாததால், அங்கு புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS